**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.47/2021**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமகிளி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இரத்தினசாமி | தொழில் | : | மெக்கானிக் |
| கிராமம் | : | பாவூர்சத்திரம் | வயது | : | 46 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Thursday of 04.06.2026.

**(2 ம் எதிரி ஆஜர். 1, 3 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் பாவூர்சத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். 17.01.2018 ம் தேதி, அதிகாலை 02.30 மணியளவில் நானும், சீனி என்பவரும் ஆலங்குளத்திலிருந்து ஊருக்கு வந்து கொண்டிருந்தபோது, எதிரிகள் 3 பேரும் சேர்ந்து ராமராஜா நடத்தி வரும் கண்சல்டிங் கடையிலிருந்து வெளியே வந்தார்கள். நாங்கள் அவரகள் இரவு வேலை பார்த்து விட்டு வெளியே வருவதாக நினைத்து போய்விட்டோம்.

அதன் பின்னர் காலை 07.00 மணிக்கு அந்த கன்சல்டிங் கடையில் கார் எறிந்து விட்டதாக கேள்விபட்டோம். இது சம்பந்தமாக நானும், சீனியும் காவல்நிலையத்தில் தகவல் தெரிவித்தோம். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

சீனியின் உறவினரின் இருசக்கரவாகனம் பழுதடைந்ததால் இரவு 01.00 மணியளவில் சீனி வந்து என்னை ஆலங்குளம் கூட்டி சென்றார்.

அந்த இருசக்கரவாகனத்தில் ஸ்டாட்டிங் பிரச்சனை இருந்தது. அதனை நாங்கள் சரி செய்து கொடுத்து விட்டு திரும்பி வந்தோம். ஆலங்குளத்தில் நிறைய இருசக்கரவாகனம் பழுது பார்க்கும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் எதிரிகளின் பெயர், முகவரி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 ராமராஜா சொல்லி எதிரிகளின் பெயர், முகவரி எனக்கு தெரிந்தது என்றால் சரிதான்.

நான் காலை 07.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றபோது போலீசார் அங்கு நின்றார்களா? என்றால் நின்றார்கள். எதிரிகள் 3 பேரும் கடையிலிருந்து வெளியே வந்து தென்காசி ரோட்டை நோக்கி போனார்கள். திசை விபரம் எனக்கு தெரியாது. நான் எதிரிகளை சுமார் 3 நொடி மட்டும் தான் பார்த்திருப்பேன் என்றால் சரிதான். நான் சொன்னதை போலீசார் எழுதிக்கொண்டார்களா? என்றால் எழுதிக்கொண்டார்கள்.

அ.சா.1 ராமராஜா எனக்கு வேண்டியவர் என்றால் பழக்கமுள்ளது. அ.சா.1 வண்டி வாங்குவதற்கு கடன் கொடுக்கும் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். போலீசார் என்னை சம்பவ தேதிக்கு பின்னர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவயிடத்திற்கு வரவில்லை என்றாலும், எதிரிகளை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 எனக்கு வேண்டியவர் என்பதினால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.06 15:28:33 +0530

<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No.47/2021</u>
<u>வழக்கு சாட்சி PW-5</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நல்லசிவம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ராமராஜா | தொழில் | : | பைக், கார் வியாபாரம் |
| கிராமம் | : | கீழப்பாவூர் | வயது | : | 28 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Thursday of 04.06.2026.

**(2 ம் எதிரி ஆஜர். 1, 3 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் பழைய பைக், கார் வியாபாரம் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். 11.01.2018 ம் தேதி, மாலை 04.30 மணிக்கு இருசக்கரவாகனத்தில் நல்ல தண்ணீர் பிடிப்பதற்காக ஊரணிக்கு போனேன். அப்போது எதிரிகள் மகாராஜனும், இராமகிருஷ்ணனும் என்னை வழிமறித்து, "இந்த டீசர்ட் எதற்கு போட்டிருக்கிறாய், நீ தான் கோவிலுக்கு வரி கொடுக்கவில்லைலா, எதற்காக போட்டிருக்க" என்று கேட்டார். அப்போது நான் "நீங்க ஆள் தெரியாம பேசுகிறீர்கள், வம்பிழுக்க நான் வரலை" என்று சொன்னேன். அப்போது எதிரிகள் இருவரும் என் டீசர்ட்டை பிடித்து இழுத்து கிழித்து விட்டார்கள். அதற்கு முன்பு வரை அந்த எதிரிகளுக்கும், எனக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. அதன் பின்னர் எனது அப்பாவை போன் செய்து வரச்சொன்னேன். எதிரிகள் இருவரிடம் எனது அப்பா கேட்டபோது, அவர்கள் எங்களுக்கு வேண்டியவர்களுக்கு நீங்க பிரச்சனையா

இருக்கீங்க என்று சொன்னார்கள். கோவில் மண்டபத்தை அடைப்பதற்கு நீங்கள் தான் காரணம் என்று சொன்னார்கள். அதன் பின்னர் நாங்கள் காவல்நிலையம் சென்று 11.01.2018 ம் தேதி புகார் கொடுத்தோம். 16.01.2018 ம் தேதி போலீசார் விசாரணைக்கு வந்தார்கள். போலீசார் சத்தம்போட்டு அனுப்பி வைத்தார்கள்.

17.01.2018 ம் தேதி அருணாப்பேரியில் கோவில் திருவிழா. அதிகாலை எனக்கு 02.30 மணிக்கு ஒரு பால்கார அண்ணாச்சி போன் செய்து, எனது கடையில் புகை மூட்டமாக இருந்ததாகவும், தீபிடித்து எறிவதாகவும் சொன்னார். நான் வீட்டிலிருந்து கேமரா மூலமாக பார்த்து விட்டு உடனே நான், எனது அப்பா, எனது தம்பி ஆகியோர்கள் சம்பவயிடத்திற்கு வந்தோம். மேல் மாடியில் இருந்த சபாரி கார் முழுவதும் எறிந்துவிட்டது. அதன் மதிப்பு ரூபாய் மூன்று இலட்சம் இருக்கும். மகாராஜா, ராமகிருஷ்ணன், சுதர்சன் ஆகியோர்கள் காரை தீ வைத்து கொழுத்தியதாக கேள்விபட்டேன். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(நேரமின்மை காரணமாக எதிரிகளின் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.06 15:28:40 +0530